ஓய்வூதியச் சுற்றறிக்கை இல: 04/2021

எனது இல : ஓ.தி./சுற்றறிக்கை/2021
ஓய்வூதியத் திணைக்களம்
மாளிகாவத்தை, கொழும்பு 10
2021.11. 05

அமைச்சுக்களின் செயலாளர்கள்

இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்

மாகாண பிரதம செயலாளர்கள்

திணைக்களத் தலைவர்கள்

மாவட்ட செயலாளர்கள் மற்றும்

பிரதேச செயலாளர்கள்

**ஓய்வு பெற்ற அரச ஊழியர்களுக்காக நடைமுறைப்படுத்தப்படும் அக்ரஹார காப்புறுதி திட்டத்தின் கீழ் உள்ள நலன்களை தொடர்ந்தும் விரிவு படுத்துதல்.**

2021.10.29 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 12/2005(VIII) இன்பால் தங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது. அச்சுற்றறிக்கையில் ஓய்வூதியர்களுக்காக நடைமுறைப்படுத்தப்படுகின்ற அக்ரஹார காப்புறுதி திட்டமானது 2016.01.01 ஆந் திகதிக்கு முன்னர் ஓய்வுபெற்ற அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் பெற்றுக்கொள்ள முடியுமான வகையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

02. "2016.01.01 ஆந் திகதிக்கு பின்னர் ஓய்வு பெறும் அரச ஊழியர்களுக்கு 2005 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளவாறு புதிய காப்புறுதி முறையொன்றை அமைத்தல் (அக்ரஹார)" எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட 2016.05.31 ஆம் திகதிய 4/2016 இலக்க மற்றும் 2017.11.24 ஆம் திகதிய 4/2016(I) இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகள் 2021.11.01 ஆம் திகதி முதல் இரத்துச் செய்யப்படுகின்றது. அத்திகதியிலிருந்து இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் அமுல்படுத்தப்படுகின்றது.

I. அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 12/2005(VIII) இன் இணைப்பு 01 குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளிற்கு அமைய அச் சுற்றறிக்கையின் இணைப்பு 02 இல் உள்ள நலன்களினை புதிய அக்ரஹார காப்புறுதி திட்டதின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும். (இச் சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.)

II. அரச மற்றும் மாகாண சேவையிலிருந்து ஓய்வு பெற்ற சகல ஓய்வூதியர்களுக்கும் இக் காப்புறுதி திட்டம் உரித்துடையதாகும். அதன்படி பங்களிப்பு செய்யும் அனைத்து

ஓய்வூதியர்களுக்கும் ஆயுட்காலம் முழுவதும் இக்காப்புறுதி நலன்களை பெற்றுக்கொள்ள முடியும்.

III. புதிய திட்டத்தின் கீழ் 70 வயதிற்கு குறைந்த ஓய்வூதியர்களிடம் மாதாந்தம் ரூபா.400 உம் 70 வயதிற்கு மேற்பட்ட ஓய்வூதியர்களிடம் மாதாந்தம் ரூபா.600 உம் பங்களிப்புக் கட்டணமாக அறவிடப்படும்.

IV. இத்த திட்டத்திற்கு பங்களிக்க விரும்பாத ஓய்வூதியர்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு முறையில் 2021.11.15 ஆந் திகதிக்கு முன்னர் தமது விருப்பமின்மையினை அறிவிக்க வேண்டும்.

a. இணைப்பு 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தினை பூர்த்தி செய்து பிரதேச செயலத்திற்கு அல்லது ஓய்வூதிய திணைக்கத்தின் பிரதான அலுவலகத்திற்கு சமர்ப்பித்தல். பிரதேச செயலக அலுவலர்களால் அத் தகவலானது மையப்படுத்தப்பட்ட தரவுத் தளத்தினுள் உள்ளீடு செய்யப்பட வேண்டும்.

b. ஓய்வூதியத் திணைக்களத்தின் இணையத்தளமான www.pensions.gov.lk இற்குள் நுழைந்து, அங்கே public services இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விருப்பத்தினை அறிக்கையிடும் திட்டத்தினை பயன்படுத்துதல்.

பி.கு – இதற்காக ஓய்வூதியரின் கையடக்க தொலைபேசிக்கு OTP இலக்கமானது அனுப்பப்படும் என்பதுடன் உரிய அறிவிப்பினை செய்யும்போது அவ் இலக்கத்தினை பயன்படுத்த வேண்டும்.

c. தகுதியுள்ள ஓய்வூதியர்களுக்கு குறுந்தகவலானது அனுப்பப்படும் என்பதுடன் அக்ரஹார காப்புறுதி திட்டத்தில் பங்களிக்க விருப்பமில்லை எனில் No என உள்ளீடு செய்து பதிலளித்தல்.

V. ஓய்வூதிய திணைக்களத்தினால் ஓய்வுபெற்ற அரச அலுவலர்களின் மாதாந்த கட்டணம் அறவிடப்பட்டு தேசிய காப்பீட்டு அறக்கட்டளை நிதியத்திற்கு வரவு வைக்கப்படும்.

03. மேலே 2 (II) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஓய்வூதியர்களுக்கு மாத்திரம் இக் காப்புறுதி திட்டதின் கீழ் பயனடைய முடியும் என்பதுடன் அவர்களின் வாழ்க்கைத்துணை, அநாதைபிள்ளைகள் அல்லது அங்கவீன பிள்ளைகளுக்கு நலன்கள் உரித்துடையதல்ல.

04. தேசிய காப்பீட்டு அறக்கட்டளை நிதியத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பப்படிவமானது (இணைப்பு 03) ஓய்வூதியர்களினால் இத்திட்டத்தின் கீழ் நலன்களை பெற்றுக்கொள்ள பயன்படுத்தப்பட வேண்டுமென்பதுடன், அப் படிவமானது கிராம அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்டு, தலைவர், தேசிய காப்பீட்டு அறக்கட்டளை நிதியத்திற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

05. வெளிநாடு சென்றுள்ள ஓய்வூதியர்களுக்கு இத் திட்டத்திற்கு பங்களிப்பு செய்வதன் மூலம் நலன்களை பெற்றுக்கொள்ள முடியும். வெளிநாட்டிலுள்ள ஓய்வூதியர்கள் தமக்குரிய

நலன்களை பெற்றுக்கொள்வதற்கான ஆவணங்களை உரிய வெளிநாட்டு தூதரகத்தின் மூலம் உறுதிப்படுத்தி தேசிய காப்பீட்டு அறக்கட்டளை நிதியத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

06. பிரதேச செயலக அலுவலர்கள் அக்ரஹார காப்புறுதி திட்டத்திற்கான அறவீடுகள் தொடர்பான தகவல்களை pension menu ⟶ pension payments ⟶ pension information மூலம் பெற்றுக்கொள்ள முடியும். அதேபோன்று ஓய்வூதியர்கள் திணைக்கள இணையத்தளத்தின் (www.pensions.gov.lk) மூலம் ஓய்வூதியம் வழங்கல் (Public Services) ஊடாக அவர்களின் அறவீடுகள் தொடர்பான விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

07. ஓய்வூதியர்களுக்கான அங்கத்துவ அட்டையொன்றை வழங்க தேசிய காப்பீட்டு அறக்கட்டளை நிதியம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

08. அக்ரஹார காப்புறுதி திட்டம் தொடர்பான மேலதிக தகவல்களை அறிந்து கொள்ள தேசிய காப்பீட்டு அறக்கட்டளை நிதியத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலரை தொடர்பு கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| பெயர் | - | திருமதி. நிமேஷா சஹபந்து |
| பதவி | - | உதவி முகாமையாளர்<br>அக்ரஹார (ஓய்வூதியர்) காப்புறுதி |
| தொடர்பு | - | 0112026668 |

**ஒப்பம்**
**ஏ.ஜகத் டி.டயஸ்**
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்

**பிரதிகள்**

| | | |
|---|---|---|
| 01 | ஜனாதிபதியின் செயலாளர் | - த.த.த. |
| 02 | பிரதமரின் செயலாளர் | - த.த.த. |
| 03 | செயலாளர், நிதி அமைச்சு | - த.த.த. |
| 04 | செயலாளர், அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு | - த.த.த. |
| 05 | தலைவர், தேசிய காப்பீட்டு அறக்கட்டளை நிதியம் | - உ.ந.மே |
| 06 | கணக்காய்வாளர் நாயகம் | - உ.ந.மே |